தேசிய கல்வி நிறுவகம் - 2023
-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கல்வி நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் படி, நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும் என்றாலும், காசு அடிப்படையில் ஆண்டுக்குரிய | பாடநெறி வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானம் காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டது. இவ்வாறு காசு அடிப்படையில் வருமானம் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அனைத்து வருமானங்களும் அட்டுறு அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்தை அடையாளப்படுத்துவதன் காரணமாக, தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இரு வருமான விடயங்களுக்காக மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய வருமானம் ரூபா 6,416,320 இனால் குறைவாகக் கணக்கிடப்பட்டது. மேலும், 2022 ஆம் ஆண்டில் பாடநெறிக் கட்டண வருவாயில் இருந்து மீளாய்வாண்டில் திருப்பியளிக்கப்பட்ட ரூபா 48,634,500 தொகை அந்த ஆண்டின் பாடநெறி வருமானத்திற்கு சீராக்கப்பட்ட காரணத்தால் அந்த ஆண்டின் வருமானத்திற்கு அதிகமாகச் செலவினம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இனங்காணப்படுவதாக கணக்கீட்டு கொள்கை கணக்கியல் கொள்கை 1.9.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட ரூபா 101,399,997 பெறுமதியான கட்டிடங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பத்தி 14(ஆ) பந்தியின் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கு வைப்பதற்கு பதிலாக நடைமுறை வேலையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இதன் இறுதி பட்டியல் இன்னும் செலுத்தப்படாததால் இந்த மொத்த பெறுமதியும் மூலதனமாக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கட்டுமானமானது பயன்பாட்டிற்குத் தயாராக இருக்கும் நாளிலிருந்து மூலதனமாக்கப்பட வேண்டும் மற்றும் பெறுமானத் தேய்விடல் ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் பந்தி 09 (ஈ) இன் படி, விற்பனை அல்லது விநியோகத்திற்கான உற்பத்தி செயல்பாட்டில் உள்ள சொத்துக்கள் இருப்பாக அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 14,517,150 தொகையான இருப்பு அவ்வாறு இனங்காணப்பட்டிருக்காது | அது தவறுதலாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காணப்படும் நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் விற்பனை அல்லது விநியோகத்திற்கான உற்பத்திச் செயல்பாட்டில் உள்ள சொத்துக்கள் ஈருப்பாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் படி, பெறப்பட்ட வருடத்தில் மூலதன மானியங்கள் வருமானமாக கணக்கிடப்பட வேண்டும் என்றாலும், மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா.2,426,922,883 கூட்டுத்தொகை மற்றும் கடந்த வருடங்களில் கிடைத்திருந்த ரூபா 2,426,922,883 ஆன மூலதன மானியங்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக மூலதன கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. 2024 கணக்குகளைத் தயாரிக்கும் போது இந்தப் பிழை சரிசெய்யப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்தாக அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனை அல்லாத பரிவர்த்தனையிலிருந்து வளங்களின் உட்பாய்ச்சல்கள் வருமானமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 17 இன் படி, பிரிவுகள் (Segment) வருமானங்கள் மற்றும் செலவுகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்றாலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அச்சீட்டு மற்றும் வெளியீட்டு திணைக்களம் மற்றும் விடுதிக்காக தனியான இலாபம், வருமானம் மற்றும் செலவினம் இனங்காணப்படக்கூடிய வகையில் கணக்கீட்டு நியம இலக்கம் 17 இன் பிரகாரம் தனியாக கணக்குகளை தயாரித்து 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது என்பது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பிரிவுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் படி, ஊழியர் பணிக்கொடை நலன்களைக் கணக்கிடுவதில், உண்மையான நன்மை முறை (Actuarial Valuation Method) பயன்படுத்தப்பட வேண்டும், ஆனால் நிறுவனத்தினால் நியமத்தின் தேவைப்பாட்டுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் சேவைக் | அமைய அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களை நிரந்தரமாக்கும் போது, சேவைக்காலம், நியமனம் திகதி மற்றும் பிற தகவல்கள் உள்ளிட்ட சரியான தகவல்களை கணினியில் உள்ளிடாததால் ஏற்பட்ட பிழை காரணமாக இந்த பணிக்கொடை ஒதுக்கீடு நிலுவை குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடை நலன்களை கணிப்பீடு செய்யும் போது உண்மையான நன்மை முறை பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காலத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டுக்குரிய பணிக்கொடை ஒதுக்கீடுகளைக் கணக்கிடுவதில், 77 உத்தியோகத்தர்களின் சேவைக் காலத்தை சரியாகக் குறிப்பிடாத காரணத்தால், ஆண்டுக்கான பணிக்கொடைச் செலவு மற்றும் பணிக்கொடை ஒதுக்கீடு கணக்கின் நிலுவை ரூபா 4,824,483 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 மார்ச் 22 ஆந் திகதி பணி நிறைவு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 198,953,155 தொகையான விடுதிக் கட்டிடம் மூலதனமாக்கப்படாது நடைமுறை வேலை கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் கட்டிடங்கள் கணக்கில் மற்றும் நடைமுறை வேலை கணக்கானது அந்த அளவினால் முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய கட்டிடங்களின் தேய்மானமாக ரூபா 7,740,095 கணக்கு வைக்கப்படாத காரணத்தால், வருமானத்திற்கு அதிகமான செலவு மற்றும் கட்டிட மதிப்பு முறையே அந்த அளவினால் முறையே குறைத்தும், மிகைப்படுத்தப்பட்டும் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீப்பே தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையத்தின் விடுதிக் கட்டிடத்திற்கான இறுதிக் கட்டணம் இதுவரையில் செலுத்தப்படவில்லை என்பதால் நடைமுறை வேலை கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | கட்டிடத்தினை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு கொண்டு வரப்படும் போது அதை மூலதனமாக்க வேண்டும். |
| (ஆ) கட்டிடப் பழுதுபார்ப்புக்கு செலவிடப்பட்ட மூலதனச் செலவான ரூபா 46,473,987, மீண்டெழும் செலவினமாகக் | இந்த கட்டிடம் தீயணைப்பதற்கு முன்னர் அந்த கேட்போர் கூடத்திற்குரிய கிரயம் | மூலதனத் தன்மையிலான செலவினங்கள் ஆதனங்கள், பொறிகள் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிட்டதன் காரணமாக, மீளாய்வாண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,792,932 இனால் மற்றும் திரண்ட இலாபம் ரூபா 40,681,056 இனால் முறையே அதிகரிக்கப்பட்டும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்குரிய பரிந்துரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாதிருந்த காரணத்தால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதயில் நிறைவடைந்திருந்த போதிலும், அதற்கரிய கிரயம் ரூபா 46,473,987 ஆன தொகை கணக்கு வைக்கப்படவில்லை என்பது. | மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மீளாய்வாண்டினுள் ரூபா 4,379,807 தொகை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த முற்பணம் தனிநபர் வரி வழுக்களுடன் நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய மற்றும் ஆண்டுக்குரிய கணக்கு வைக்கப்பட்ட சேவைகளின் செலவினத்திலிருந்து கழித்து காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் பெற வேண்டிய மீதி மற்றும் ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் அந்த அளவினால் முறையே அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | அது பேரேட்டுப் பதிவுகளின் மூலம் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்கள் போதிய கவனத்துடன் தயாரிக்கப்படும் வகையில் அதனுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் போது Technical Education Development Programme (TEDP) செயற்திட்டத்தின் கீழ் தேசிய கல்வி நிறுவகத்திற்கு கிடைத்திருந்த ரூபா 17,239,551 பெறுமதியான உபகரணங்கள், மூலதனமாக்குவதற்கு பதிலாக மீண்டெழும் செலவினங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இதில் இயந்திரங்கள் மற்றும் மென்பொருள் போன்ற உறுதியான மற்றும் அருவமான சொத்துக்கள் உள்ளதால், தொடர்புடைய திட்டவட்டமான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு 2024 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | பரிமாற்றப்படாத பரிவர்த்தனைகளிலிருந்து மூலதன தன்மையிலான வளங்களின் உட்பாய்ச்சல் சொத்துகளாகவும் வருமானமாகவும் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தேசிய கல்வி நிறுவகத்தின் மஹரகம மற்றும் மீப்பே வளாகத்தினுள் உள்ளக வீதிக் கட்டமைப்பு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 இல் மேற்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டிற்குப் பிறகு, அந்த கம்பனியால் வீதியின் நிலத்தின் மதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.<br><br>ஆனால் கணக்காய்வின் அறிவுரையின் அடிப்படையில், எதிர்காலத்தில் வீதிகளின் பெறுமதி தனித்தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உள்ளக வீதிக் கட்டமைப்பு ஒரு தேய்விடக்கூடிய சொத்து என்பதால் தனி சொத்து வகுப்பின் கீழ் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மத்திய களஞ்சியத்தில் எஞ்சியுள்ள இருப்பு ரூபா 20,791,680 ஆன போதிலும், பௌதீக மெய்மையாய்வின் அடிப்படையில் அது ரூபா 22,170,925 ஆனமையால் ரூபா 2,053,918 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. அவ்வாறே நிதிக்கூற்றுக்களில் குறிப்ப இலக்கம் 04 இல் எஞ்சிய இருப்பினுள் மத்திய களஞ்சியத்தில் ரூபா 20,791,680 தொகையான எஞ்சிய தொகை இரு தடைவ உள்ளடக்கப்பட்ட காரணத்தால் இருப்பு மற்றும் ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | புதிய கணக்கீட்டு கட்டமைப்பிற்கு 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியில் உள்ளடக்கும் போது ஏற்பட்டுள்ள தவறு காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது என்பது. மேலும், பௌதீக இருப்பு மற்றும் இருப்பு பதிவேடுகளின் பிரகாரம் காணப்படும் இருப்பு ரூபா 22,170,925 இற்கு சமனானது என்பது. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்படும் சரியான பௌதீக இருப்பு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியா விடுதி அறைகள் மற்றம் உணவு வருமானம், விடுதிக்குரிய பதிவேடுகளுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 2,971,304 மற்றும் ரூபா 6,176,680 ஆன இணக்கமின்மை நிலவியது. | தங்கும் விடுதி வருமானம் மற்றும் சிற்றுண்டிச்சாலை வருமானத்தை காசு அடிப்படையில் கணக்கிட்டதால் இந்த சிக்கல் எழுந்துள்ளது. | அனைத்து வருமானமும் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஏ) | நிறவனத்தினால் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் இடர் கடன் மீதிக்காக மீளாய்வாண்டுக்கு | இடர் கடன் நிதியத்தினுள் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் நிதியில் பெறப்படும் வட்டியை மட்டுமே | அனைத்து பெறுவனவுகளும் வருமானமாகக் கணக்கிடப்பட்டு, |

| | | |
|---|---|---|
| உரியதாக கிடைத்திருந்த ரூபா 2,800,519 கடன் வட்டி ஆண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்படாது ஊழியர் கடன் நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 11 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 87,728,162 தொகையான ஊழியர் கடன் நிதியக் கணக்கில் மீதியை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொண்டுள்ளது.<br><br>கணக்காய்வு அவதானிப்புகளின் அடிப்படையில், எதிர்காலத்தில் இடர் கடன் நிதியைப் பயன்படுத்தி கடன்களை வழங்குவதற்கான திட்டங்களைத் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. | முன்மொழியப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நடைமுறை பொறுப்புகள் மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள மீள செலுத்தப்பட வேண்டிய விலைக்கேள்வி பிணைமுறியாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 1,338,349 கூட்டுத்தொகையான வைப்பு அறிக்கையின் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 ஆண்டுகளுக்குப் பிறகு, தக்கவைப்புத் தொகை வருமானத்திற்கு எடுக்கப்படுவதுடன், மேலும் இது ஒரு கொள்கையாக நிறுவனத்தால் தொடரப்பட்டாலும், கணக்குக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | பொறுப்புகள் துரிதமாக தீர்க்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகத்தின் 4(க) மற்றும் 28 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதி ஒழுங்குமுறைக் கோவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டு | தேசியக் கல்விக் நிறுவகத்தின் நிர்வாக மற்றும் நிதி ஒழுங்குமுறைக் கோவையில் தேவையான திருத்தங்களைச் செய்த பின்னர், அடுத்த நிறுவனப் பேரவைக்கு அனுப்பப்பட்ட | நிறுவனத்திற்கான நிர்வாக மற்றும் நிதி விதிமுறைக் கோவையொன்று தயாரிக்கப்பட்டு திறைசேரியால் அங்கீகரிக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்படவில்லை. | பின்னர், பொது திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொளளப்பட உள்ளது. | வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 571 | தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம், 2 ஆண்டுகளுக்கும் மேலான வைப்புத்தொகை அரசு வருமானத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும், ஆனால் ரூபா 7,245,258 தொடர்பில் அவ்வாறு செய்யப்படவில்லை. | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதில் இதைக் கையாள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மூன்றாவது பட்டோலையின் கீழ் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்ற தயாரிப்பதற்கான அறிவுரை | குறிப்பிடப்பட்ட விதிமுறைகளின்படி நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்பட்ட ரூ.6,693,658,873 சொத்து ஆலை மற்றும் உபகரணங்களுக்கு நிலையான சொத்து பதிவு தயாரிக்கப்படவில்லை.<br><br>எதிர்காலத்தில் சரியான விரிவான நிலையான சொத்து பதிவேட்டை தயாரித்து பராமரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | | நிறுவனத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள செயல்வழிக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவு | இந்த நிறுவனத்தினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை அடுத்த வாரத்திற்குள் அமைச்சரவைக்கு அனுப்பிவைக்க கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. 2022 ஆண்டறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. | சுற்றறிக்கையின் ஆண்டு அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க மற்றும் 09/2009 (I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | தேசிய கல்வி நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தின் 07 உத்தியோகத்தர்களுக்கு கைவிரல் அடையாள இயந்திர மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றை உறுதி செய்திருக்காத போது சம்பளம் மற்றும் படிகளாக மீளாய்வாண்டில் மாத்திரம் ரூபா 16,102,642 செலுத்தப்பட்டிருந்தது. | தேசிய கல்வி நிறுவனத்தின் 2011 செப்டம்பர் 02 ஆம் திகதிய நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 426 இன் பிரகாரம் முன்னாள் II தரத்தில் உள்ள மற்றும் அதனை விட உயர்வான பதவி வகித்த தற்போதைய பிரதி பணிப்பாளர்கள் மற்றும் அவரை விட உயர்வான பதவி வகித்த உத்தியோகத்தர்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதிவு செய்வதன் மூலம் சேவைக்கு வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதில் இருந்து விடுதலை அளிக்கப்பட்டுள்ளமை. | தொடர்புடைய சுற்றுறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் அனைத்து பதயணியினரும் விரல் அடையாளத்தினை பதிவு செய்யும் இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றை பதிவு செய்ய வேண்டும். அரசாங்கத்தில் நிலவும் சுற்றறிக்கைகளை மீரும் வகையில் நிறுவனத்தின் சுற்றறிக்கை வெளியிடப்பட கூடாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 150,995,694 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 572,939,994 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 723,935,688 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பாடநெறி வருமானம் குறைவடைந்தமை மற்றும் அரச மற்றும் வெளிநாட்டு மானியங்களின் குறைவும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

2023 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டுக்கு ஒப்பாக பாடநெறி வருமானம் 84 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முனைவர் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக 2014 ஒக்தோபர் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்காக வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிற்கு ரூபா 3,314,697 செலுத்தப்பட்டிருந்த போதிலும், மருத்துவ காரணங்களின் அடிப்படையில் அவர் பட்டப்படிப்பை இடை நடுவே நிறுத்தி நாட்டுக்கு மீள திரும்பி இருந்தார். குறித்த உத்தியோகத்தரிடம் இருந்து உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 2,233,225 தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | இந்த பட்டப்படிப்பிற்காக மற்றும் ஒரு உத்தியோகத்த அனுப்பப்பட்டு அந்த வெளிநாட்டு பல்கலைக்கழகத்திற்கு செலுத்திய பாடநெறி கட்டணங்களை ஈடு செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டவாறு உள்ளது. அவ்வாறு அல்லாதுவிடின் அந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் செல்லும் கால எல்லையில் உள்ள காரணத்தால் நிர்வாகப் பிரிவில் அறிவித்து அது சம்பளத்திலிருந்து அறவிடக் கூடிய ஆகக்கூடிய தவணைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | 2016 ஆம் ஆண்டில் இந்த உத்தியோகத்தர் பாட நெறிகளை கைவிட்டு மீள வருகை தந்திருந்த போதிலும் அந்த ஆண்டில் மற்றும் ஒரு உத்தியோகத்தரை ஈடுபடுத்தி குறித்த நட்டத்தை குறைத்துக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறு காலத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்காது இருக்கும் நிலையில் பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக 50 சதவீதத்தினை விஞ்சி செலுத்தப்பட்டிருந்த வளப்பங்களிப்பு படிகளின் பெறுமதியை மீண்டும் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,718,318 தொகையை குறித்த உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிடாது பணிக்கொடையிலிருந்து அளவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பில் அவர்களுக்கு மீண்டும் அறிவித்து அவர்களின் விருப்பினை பெற்று குறித்த பணத்தை சேவையில் ஈடுபட்டிருக்கும் போதே தவணைகளாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை நிதிப்பிரமாணம் 119 இன் பிரகாரம் உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேசிய கல்வி நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 35,130,300 பெறுமதியான கட்டிடத்திற்காக வாடகை உடன்படிக்கையினை மேற்கொள்ளாது வாடகை தொகை அளவிடப்படாது வெளிவாரி நிறுவனம் ஒன்றுக்கு அலுவலகத்தை நடத்திச் செல்வதற்கு வழங்கப்பட்டிருந்தது. | தேசிய கல்வி நிறுவனத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் ஆரம்பம் முதல் மகாரகம தபால் நிலையத்துடன் இணைந்ததாக உப தபால் நிலையம் ஒன்றினை இலங்கை வங்கியின் கிளை ஒன்றும் நடத்திச் செல்லப்படுகிறது. எனினும் கணக்காய்வினால் சுட்டி காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு இந்த அலுவலகம் நடாத்து செல்லப்படும் கட்டிடங்களை மதிப்பீடு செய்த பின்னர் உரிய அரச நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கட்டணங்களை அறவிடுதல் தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளிவாரி நிறுவனங்களால் அலுவலகத்தை நடத்திச் செல்லும் இடத்திற்கு காணிக்கு உரிய சட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியதுடன் வாடகை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு விடுதி ஒன்றில் துணை துவைக்கும் அறை மற்றும் அதில் ரூபா 3,955,181 பெறுமதியான உபகரணங்கள் மீளாய்வாண்டின் மார்ச் மாதம் வரையிலும் விளைவற்று பயன்படுத்தப்படாது காணப்படுகிறது | தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் வெளிநாட்டு மாணவர்களுக்காக விடுதி வசதிகளை வழங்கும் நோக்கம் நிறைவேற்றப்படாத காரணத்தால் இவை குறை பயன்பாட்டுடன் காணப்படுகின்றன. சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இதற்காக மின் அழுத்திகளை எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பொருட்களை கொள்வனவு செய்யும் போது தேவை, முன்னுரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வி நிர்வாக மற்றும் அபிவிருத்தி திணைக்களத்தில் பணிப்பாளர் (ப.க) சிரேஷ்ட விரிவுரையாளரின் மோசடிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடுதலைக்கான காரணங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என 2012 டிசம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த உத்தியோகத்தரின் மோசடி தொடர்பில் கவனம் செலுத்தாது முன்னால் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் தகைமைகளை பூர்த்தி செய்கிராத போது 2015 மே 11 ஆம் திகதி குறித்த நபருக்கு சிரிஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு தேசிய கல்வி நிறுவனத்தின் ஒழுக்காற்று அதிகாரமான தாபன கிளைக்கு இந்த நிலைமையை அறிக்கையிட்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அறிவுரைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய கல்வி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் பிரகாரம் தகைமைகளை பூர்த்தி செய்திராத பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவி வகிக்கும் இரு உத்தியோகத்தர்கள் தொடர்பில் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட | மூவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு பரிந்துரைகளைப் பெற்று 2024 ஜுன் 24 ஆம் திகதி சட்டமா அதிபரிடம் கோரி மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டியதுடன் தவறாக வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வுகள் |

குறைபாடுகள் அனைத்தையும் நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு வருட காலம் கடந்திருந்த போதிலும், உரிய தகைமை இல்லாது பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்தும் குறித்த சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டவாறு இருந்தது.

திருத்தப்பட வேண்டும்.